மலர் - 9 டிசம்பர் - 1996 இதழ் - 12

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்

இடம் :- மணல் மேடு வீதி, ஈரோடு 638002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே

பக்கம்


1. "ஐயா, இது இந்த வருஷம் இருக்கட்டும்" 1
2. படங்கள், சுருபங்கள், விக்கிர ஆராதனை 8
3. பிரசங்கியார் பகுதி 14
4. "முழு நிச்சயமாக நம்பினார்கள்" 17
5. அந்நிய பாஷை பேசுதல் 19
6. "அது எவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது" 22
7. பல இடங்களிலும் சபை ஒன்றே! 27
8. கிறிஸ்து ஏன் மரித்தார்? 30

THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 DECEMBER - 1996 ISSUE - 12

ஆசிரியவுரை

## "ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்"

உலகத்தைப் பாவத்தின் கோரப் பிடியிலிருந்து மீட்கும்படியாய், பூமிக்கு வந்த உன்னத இரட்சகராம் இயேசுக் கிறிஸ்து, தன்னுடைய போதனையில் சாதனை படைத்தவர், என்று சொல்வது நிச்சயமாக மிகையாகாது. ஏனெனில், அவரைத் தேவனாகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள் கூட, அவருடைய போதனையின் சாதனையை ஒத்துக் கொள்ளத் தயங்குவதில்லை. அதில் அன்பும், கனிவும், கரிசனையும் மாத்திரமல்ல கண்டிப்பும், உறுதியும், அதிகாரமும் இருந்தது. அவருடைய பிரசங்கங்கள் எதையும் எதிர்பார்த்து, லாப நோக்கோடு செய்யப்பட்டவை அல்ல. மேலும், பரலோகத்தின் தேவனைத் தவிர, யாரையும் திருப்திப்படுத்த வேண்டுமென்ற நிர்பந்தமும், அவசியமும் அவருக்கிருக்கவில்லை.

ஆகவே தான், வேதாகம சரித்திரத்திலும், உலகச் சரித்திரத்திலும் மங்காத ஓர் இடம் அதற்குக் கிடைத்தது. இவ்வெற்றியின் இரகசியம் என்னவென்று இன்னும் கொஞ்சம் நெருங்கிப் பார்த்தால், வேறு சில உண்மைகளும் தெரியவரும். அவைகளில் ஒன்று, அவரால் மிக ஞானமாகப் பயன்படுத்தப்பட்ட **"உவமைகளாகும்"**.

வேதாகமத்தின் ஆரம்ப காலந்தொட்டே, பரலோகத்தின் காரியங்களைப் புரிந்து கொள்வதில் மானிடத்திற்கு மாபெரும் சிரமம் இருந்தது. தனது

அறிவாலும், ஆற்றலாலும் புரிந்து கொள்ள முயற்சித்தாலும், அவை அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகவே மாறியது. தீர்க்கதரிசிகள் தேவனின் வாயாக இருந்து எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், அதைப் புரிந்து கொள்வதில், தோல்விகளையே தொடர்ந்து கண்டான், மனிதன்.

சரி, புதிய ஏற்பாட்டுக்குள் பிரவேசித்துப் பார்த்தால், அங்கும் அதே கதை தான். "மனந்திரும்புங்கள்" என்ற யோவான் ஸ்நானகனின் போதனையை எல்லோரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொண்டவர்களின் பெரும் எண்ணிக்கையும் ஒப்புக்குச் செய்ததைப் போலவே தெரிகிறது. அவரின் போதனைகளை சுத்தமாக ஒதுக்கித் தள்ளியவர்கள் யாரென்று பார்த்தால், அன்றைய சமுதாயத்தால் விபரம் அறிந்தவர்களென்றும், படித்தவர்களென்றும் பறைசாற்றப்பட்ட பரிசேயர், சதுசேயர், வேதபாரகர்கள், நியாய சாஸ்திரிகள் என்பவர்களே. இவர்களெல்லாம் மோசேயின் பிரமாணத்தில் தேறினவர்களென்றும், அவைகளைக் கரைத்துக் குடித்தவர்களென்றும் பெயர் பெற்றவர்கள்.

விபரம் தெரிந்தவர்களென்று கருதப்பட்ட இவர்களுக்கே யோவான் ஸ்நானகனின் போதனைகளையும், இயேசுக் கிறிஸ்துவின் போதனைகளையும் புரிந்து கொள்ள, இந்தப்பாடு எனில், அன்றைய பாமர மக்களின் நிலை இன்னும் பரிதாபமாகவே இருந்திருக்கும். எந்த விஷயத்திலும் ஏழைகளின் நிலை கண்டு இரங்கும் இயேசு ஆண்டவர், போதனையிலும் அவர்களுக்குக் குறை வைக்க விரும்பவில்லை. அவர்களின் ஆன்மீகத் தேவையில், அவர்கள் தன்னிறைவு காண வேண்டுமென்று விரும்பிய இயேசு, ஒரு வித்தியாசமான அணுகு முறையை தன்னுடைய போதனையில் கையாண்டார். அவைகள் தான், பின்னாளில் "உவமைகள்" என்று பிரபலமாகியது. வேதாகமப் பிரசங்கிகளில், உவமைகளைக் கையாண்ட ஒரே பிரசங்கி நமதாண்டவர் மாத்திரமே.

"உவமை" என்பது ஒரு உதாரணமே. "ஒருவர், தான் போதிக்க விரும்பும் மார்க்கப் பேருண்மைகளை பரலோகத்தின் இரகசியங்களை எல்லோருக்கும் தெரிந்த ஒன்றைக் கொண்டோ அல்லது ஒரு கதை மற்றும் ஒரு சம்பவத்தைக் கொண்டோ, கேட்போர் புரிந்து கொள்ளும்படியான அளவில் எடுத்துரைப்பது தான் உவமைகளாகும். இவைகளைக் கொண்டு தான், அன்றைய மார்க்க முன்னோடிகளாலும் புரிந்து கொள்ள இயலாதவைகளைப் பாமரர்களும் புரிந்து கொள்ளும்படியாகவும், ஏற்றுக் கொள்ளும்படியாகவும் போதித்தார். எந்தவொரு வலிமையான கருத்தையும், எளிமையான உவமைகளைக் கொண்டே எடுத்து இயம்பினார்.

இயேசுக் கிறிஸ்து, தன்னுடைய நாட்களில், தம்மைப் பின்பற்றி வந்த திரளான மக்கள், கேட்கும்படியாகச் செய்த பெரும் பிரசங்கங்களின் அடிப்படைக் கருத்து மனந்திரும்புதலாகும். தேவனைப் பின்பற்ற இந்த அருங்குணம் அத்தியாவசியமானது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால், வேதாகமத்தின் தொடக்கம் முதல் செய்யப்பட்டு வரும் இப்பிரசங்கத்திற்கு இன்னும் ஓய்வு கிடைக்கவில்லை. இதற்கு ஓய்வு கொடுக்க நாம் யாரும் தயாராகவும் இல்லையென்பதே உண்மையிலும் உண்மை.

சரி, நமதாண்டவரின் ஊழிய நாட்களில், ஒரு சமயம், மனந்திரும்புதலின் அவசியத்தைக் குறித்து வலியுறுத்த விரும்பி ஒரு உவமையைச் சொன்னார். இதோ அவ்வுவமை. *"அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவன் தன் திராட்சத் தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்தான். அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. அப்போது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ மூன்று வருஷமாய் இதே அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை. இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன் : ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன், கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப் போடலாம் என்று சொன்னான் என்றார்" (லூக். 13 : 6–9)*

இந்த உவமையை லூக்கா ஆசிரியர் மட்டும் கொடுத்துள்ளார். இதில் தான் **"ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்"** என்ற அக்கறையும், அர்த்தமும் உள்ள வார்த்தைகள் இடம் பெற்றுள்ளது.

இயேசுக் கிறிஸ்து இவ்வுவமையைச் சொன்னபோது, யூதர்களை மனதிலே வைத்தே சொன்னார். ஏனெனில், யூதர்கள் விஷயத்தில், தேவன் நீடிய பொறுமையுள்ளவராகவே இருந்து, வெகு காலம் அவர்களைத் தண்டனைக்கு உட்படுத்தாமல் எச்சரிப்பு மேல் எச்சரிப்புக் கொடுத்துக் காத்திருந்தார். வேறு எந்த ஜனத்தின் மீதும் தேவன் இவ்வளவு பரிவு காட்டினதேயில்லை. ஆகவே, யூதர்களுக்கு இயேசுக் கிறிஸ்து கொடுத்த இறுதி எச்சரிப்பு போல இவ்வுவமை அமைந்தது.

ஆனால், இதையே வேறொரு கோணத்தில் நாம் பார்க்கும் போது, இதன் பொருள், மனந்திரும்பும் வாய்ப்பு அநேகம் கிட்டியும், அதை வீணடித்துக் கொண்டிருக்கும் மனம் மாறாத ஒவ்வொரு பாவிக்கும், மனந்திருந்தி மீண்டும் பின்வாங்கிப் போன நிலையிலும், ஒரு வேளை நிலைத்திருந்தும் ஆவியின்

கனியைக் கொடாமல் ஜீவித்துக் கொண்டுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பொருந்தக் கூடியதாகவே உள்ளது. ஏனெனில், இந்த மரத்தைக் குறித்து, இயேசுவானவர் சொன்னபோது, அது திராட்சைத் தோட்டத்தின் நடுவில் நடப்பட்டிருந்ததாகச் சொல்கிறார். பொதுவாகவே, திராட்சைக் கொடிகள், பாங்காகப் பண்படுத்தப்பட்டு, சிறப்பாக வேலியடைக்கப்பட்ட நிலத்திலே தான் பயிரிடப்படும். அதன் நடுவில் நடப்பட்டிருந்தது என்று சொல்லப்பட்டிருப்பதால், இதற்குத் தேவையான எல்லாவிதமான பராமரிப்பும், பாதுகாப்பும் கொடுக்கப்பட்டிருந்தது என்று அறியலாம்.

ஆனால், கனிகளைத் தேடினால் ஒன்றும் இல்லை. ஏழாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் "மூன்று வருஷம்" என்பது, ஏதோ மரம் வைத்து மூன்று வருடம் என்று நினைத்துவிடாதீர்கள். கனி கொடுக்கும் பருவம் வந்து, பிறகு மூன்று வருடம் கனிகளைத் தேடி, அதன் பிறகு தான் 'வெட்டிப் போடலாம்' என்ற முடிவுக்கு வருகிறார் எஜமான்.

அருமை நண்பரே! நம்முடைய நிலை எப்படி?வருடத்தின் இறுதி நாட்களில் நின்று கொண்டுள்ளோம். நம்முடைய ஆவிக்குரிய வாழ்வைச் சீர்தூக்கிப் பார்க்க இதைவிடச் சரியான சமயம் கிடைக்காது. இப்பொழுது நம் ஒவ்வொருவருடைய வயது என்ன? நாம் ஒவ்வொருவரும், நம்முடைய வாழ்க்கையில் மனம்திரும்பி கனி கொடுக்கும் பருவத்தை எப்பொழுதோ எட்டிவிட்டோம். உண்மையான தேவனைப் பற்றியும், அவரின் திருச்சித்தம் பற்றியும் எப்பொழுது அறிந்து கொண்டோமோ அப்பொழுதே மனந்திரும்ப வேண்டிய பருவம் நமக்கு வந்தாயிற்று. எப்பொழுது நாம் உண்மையான சத்தியத்தை அறிந்து, மனப் பூர்வமாய் அதை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானத்தின் மூலம் அதற்குக் கீழ்ப்படிந்தோமோ அப்பொழுதே கனி கொடுக்கும் பருவமும் வந்துவிட்டது.

அன்பரே! நண்பரே! நாம் மனந்திருந்திவிட்டோமா? சகோதரரே! நாம் மனம் திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுத்துக் கொண்டுள்ளோமா? இயேசுவின் உவமையில் முக்கியமான ஒன்றைக் கவனித்தீர்களா? "மூன்று வருடம்" என்பதே மிக அதிகபட்ச காலமாகச் சொல்லப்பட்டுள்ளது. எத்தனை ஆண்டுகளாக ஒன்றான மெய்த்தேவன் பற்றியும், அவரின் உண்மையான சத்தியம் பற்றியும் நாம் கேட்டுக் கொண்டுள்ளோம்? முதன் முதலாக, உங்களுக்கு சுவிசேஷம் எப்பொழுது அறிவிக்கப்பட்டதென்று நினைவில் உள்ளதா? ஆம் எனில், அன்றிலிருந்து இந்த நிமிஷம் வரை எத்தனை

ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரிகிறதா? அத்திமரத்தை வெட்டி சாய்க்க இயேசுக் கிறிஸ்து உவமையில் மூன்று வருடங்களே அதிகம் என்கிறாரே, வீணாய்க் கழிந்து கொண்டிருக்கும் நம்முடைய வருடங்கள் எத்தனை? உணர்வே இல்லையா? நண்பரே! நம்முடைய நிலை என்ன?

எனதருமை சகோதரனே, சகோதரியே, நானும் நீங்களும் ஞானஸ்நானம் பெற்று எத்தனை ஆண்டுகளாகிறது? எத்தனை ஆராதனையில் பங்கு பெற்றிருப்போம்? எவ்வளவு பிரசங்கங்களைக் கேட்டிருப்போம்? நமக்காக இயேசுக் கிறிஸ்து செய்த தியாகத்தை எண்ணிப் பார்க்கும்படியான வாய்ப்பு "கர்த்தரின் பக்தி" வாயிலாக ஏராளமாக நமக்குக் கிட்டினதே. இவையெல்லாமே இருந்தும் நம்முடைய நிலை என்ன? கனி கொடுக்கிறோமா? கனி கொடுப்பவர்கள் போல வேஷம் போட்டுத் திரிகிறோமா? ஒரு வேளை நாம் வேஷதாரிகளாக இருந்தால், காட்சி மாறும் போது, சாயம் வெளுக்கும் என்பது நினைவில் இருக்கட்டும்.

இந்த உவமையில் நாம் கவனிக்க வேண்டிய வேறொரு காரியம், நம்மை சிந்திக்க வைக்க வேண்டும். பொறுமையும், சகிப்புத்தன்மையும் நிறைந்த நமது தேவன் ஒரு கட்டத்தில் அதை இழக்கிறார். எஜமான் தோட்டக்காரனை நோக்கி, "இதை வெட்டிப்போடு" என்று சொல்கிறார். (13 : 7) வெட்டிப்போடு என்று எஜமான் சொன்னதில் முழு நியாயம் உண்டு. குறை சொல்ல ஒன்றுமேயில்லை. நல்ல நிலத்தில் ஊன்றப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, கனிகொடுக்கும் பருவம் வரை பாங்காய் வளர்க்கப்பட்டு, கனி கொடுக்கும் என்று மூன்று வருடங்கள் வரை காத்திருந்தே வெட்டச் சொல்கிறார். அங்கே வெட்டப்படுவதற்குச் சொல்லப்படும் காரணம் ஒன்றல்ல, இரண்டு. 1. கனியில்லை 2. நிலத்தையும் கெடுக்கிறது. கனியற்ற மரம், தன் கீழாக உள்ள நல்ல நிலத்தையும் கெடுப்பது போல், மனந்திருந்தாத ஒருவன், ஆவியின் கனி கொடாத ஒருவன் தன் அருகிலும், தன்னைச் சுற்றிலும் உள்ளவர்களையும் கெடுத்துக் கொண்டுள்ளான். இக்கருத்தை ஞான சாலமோனும் ஆமோதிக்கிறா. "*...பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான்*" (பிர. 9 : 18). எனக் கூறுகிறார். ஆனால் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்று பவுலடியார் கூறுகிறார். (I தீமு. 2 : 4). ஒருவனுடைய கெட்ட நிலை, மற்றவர்களையும் கெடுக்க தொடர்ந்து அனுமதிக்கப்போவதில்லை. வீணாக, வாழ்க்கையில் இழந்தும், ஏமாந்தும் போக வேண்டாம்.

சரி, நம்முடைய காரியம் ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்று நாம் எண்ணி நடுங்கும் வேளையில், ஒரு ஆறுதலான செய்தியும் இந்த உவமையில் உண்டு. ஆம், பாடுபட்ட தோட்டக்காரன் எஜமானிடம் கெஞ்சுகிறான். அத்திமரத்தின் அருமையையும், சிறப்பையும் அறிந்த அந்தத் தோட்டக்காரன் மன்றாடுகிறான். “ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்” என்று தவணை கேட்கிறான். இந்தத் தோட்டக்காரனைப் போலவே, நம்முடைய பெலவீனங்களையும், நமக்குள்ளாக உள்ள ஆத்துமாவின் மேன்மையையும் நித்தியத்தன்மையையும் அறிந்த இயேசுக் கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் மன்றாடிக் கொண்டுள்ளார். இதைக் குறித்து யோவான் அப்போஸ்தலன் என்ன கூறுகிறார் பாருங்கள். “என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன், ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுக் கிறிஸ்து, நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்” (I யோவா. 2 : 1)

மேலும், அந்தத் தோட்டக்காரன் சொல்வதைக் கேளுங்கள். “நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன்” என்றான். அதாவது கனிகளைக் கொடுக்கும் படியான எல்லாவித முயற்சிகளையும் மீண்டும் ஒருமுறை செய்து பார்க்கிறேன் என்று கூறினான்.

எனக்கு அருமையானவர்களே! கர்த்தர் அனுமதி கொடுத்தால், அவருடைய கண்களில் நமக்கு தயவும், அவருடைய சமூகத்திலிருந்து நமக்கு இரக்கமும் கிடைத்தால் இன்னும் சில நாட்களில் நாம் புதிய ஆண்டுக்குள்ளாகப் பிரவேசிக்க உள்ளோம். கூட்டிக் கொடுக்கப்படும் ஆண்டு, நமக்குத் தரப்படும் தவணையின் ஆண்டாக இருக்கலாம். மிகுந்த எதிர்பார்ப்போடு கூட்டிக் கொடுக்கப்படப் போகும் புதிய ஆண்டில் நாம் என்ன செய்ய உள்ளோம்? நம்முடைய திட்டம் என்ன? வழக்கம் போல, மீண்டும் ஒரு முறை பிதாவாகிய தேவனையும், இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவையும், அவர் தம் இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த சபையையும் நாம் ஏமாற்றப் போகிறோமா? என்ன செய்யப் போகிறோம்?

ஒருவேளை, ஏமாற்றுவோமானால், ஏமாறுவது தேவனல்ல, நாம் தான். சந்தேகம் வேண்டாம். ஆகவே, இந்த இறுதி நாட்களில் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையைத் தற்பரிசுத்தம் செய்து பார்ப்போம். நம்பிக்கையற்றவர்களாக ஜீவித்து நம்முடைய வாழ்க்கையை நரகத்திற்கு நடத்திக் கொண்டிருந்தால், சுத்தமான சத்தியத்திற்கு நம்மை ஒப்புக் கொடுத்து,

மனம் திருந்தி, இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானத்தின் மூலம் பாவங்களை சுத்திகரித்துக் கொண்டு, கர்த்தருடைய சபையில் அங்கமாவோம். இந்த வருடத்தோடு நமது பழைய பாவ வாழ்க்கைக்கு ஒரு முடிவு கட்டுவோம். பாவம் நமது ஆத்தும வாழ்வுக்கும், நித்திய மகிழ்ச்சிக்கும்.சமாதி கட்டுமுன், நாம் பாவத்திற்கு சமாதி கட்டுவோம்.

புதிய ஆண்டுக்குள் புதிய சிருஷ்டியாகப் பிரவேசிப்போம். ஒருவனை புதிய சிருஷ்டியாக மாற்றும் சக்தி கிறிஸ்துவுக்கு மாத்திரமே உண்டு. *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.* (II கொரி. 5 : 17). ஒருவேளை, கனி கொடுக்காத கிறிஸ்தவனாக ஜீவித்துக் கொண்டிருப் போமானால், நம்மை தொடர்ந்து தாக்கி வரும் பாவங்களை அறிந்து, அவைகளைக் களைந்து, புதிய ஆண்டிலிருந்து, நிறைந்த கனிகளைக் கொடுக்கும் உண்மைப் பிள்ளைகளாய் மாறுவோம். ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்வின் அடிப்படையில், தேவையானதொரு சிறந்த முடிவை எடுக்க பரலோகத்தின் தேவன் உங்கள் ஒவ்வொருவருக்கும் இரக்கம் கட்டளையிடுவராக! ஆமென்.

“அனைவருக்கும் அடியேனது குடும்பத்தின் சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்”

**E.Z.S. ராஜநாயகம்.**

## இரட்சிப்பின் படிகள்

1. *கேள்விப் படுதல்* — *லூக் 8:18 அப் 8 : 30, 31*
2. *விசுவாசம்* — *யோ 8 : 24, அப் 13 : 48*
3. *மனந்திரும்புதல்* — *அப் 17 : 30 II பேதுரு 3 : 9*
4. *அறிக்கை செய்தல்* — *மத் 10 : 32, 33, ரோமர் 10 : 9-10*
5. *ஞானஸ்நானம்* — *மாற்கு 16 : 16 யோ 3 : 5*

# படங்கள், சுருபங்கள், விக்கிரக ஆராதனை

பல வீடுகளில் படங்கள், சுருபங்கள், சிலைகள் இன்னும் இது போன்ற பலவற்றை நிறைய வைத்து, கிறிஸ்துவின் விசுவாசிகள் இவ்வீடுகளில் வசிப்பதாக விளம்பரப்படுத்திக் கொள்ளுகின்றனர். குறிப்பாக, கத்தோலிக்கர் வீடுகளில் இவைகளை அதிகமாகக் காண முடியும். மற்ற பிரிவினை சபையார்களின் வீடுகளின் சுருபங்கள், சிலைகள் இருக்காது. ஆனால் படங்கள் நிறைய இருக்கும். இவைகளுக்கு கிராக்கி அதிகம்; எனவே; மத சம்பந்தமான புத்தகக் கடைகளில் இவை நிறைய கிடைக்கின்றன.

இந்த மத உலகிலிருந்து (கத்தோலிக்கம், புராட்டடஸ்டண்ட்) மாறி வந்தவர்களும், இப்படிப்பட்ட படங்களை, குறிப்பாக, கிறிஸ்துவின் படங்களை, வீடுகளில் வைக்கின்றனர். வழக்கமாக இப்படங்கள் அறை சுவர்களில் பல இடங்களிலும் காட்சி தரும். சில வீடுகளில், கர்த்தருடைய வாழ்வின் பல படங்கள் அடங்கிய் காலண்டர்கள் தொங்குவதைக் காணலாம். திறந்த இருதயத்திலிருந்து இரத்தம் வடிவது போன்ற "பயந்தரும்" கற்பனை மிகுந்த கர்த்தரின் படங்களையும் காண முடியும்.

இவற்றை இங்கு குறிப்பிட வேண்டிய காரணம் என்னவென்றால், இந்தக் காரியத்தைப் பற்றி சில கருத்துக்களை கூறி, சகோதரர்கள் இப்படிப்பட்ட வழக்கத்தை கைவிட வேண்டுமென்று எச்சரிக்கவே. கிறிஸ்துவினுடைய ஒரு படம் நமக்குத் தரப்படவில்லை. எனவே, அவர் எப்படி இருப்பார் என நமக்குத் தெரியாது. அப்படி இருக்கும் போது, நமது கர்த்தரின் ஒரு கற்பனை உருவத்தை வைத்துக் கொண்டு இது தான் கிறிஸ்துவின் படம் என்று கூறுவது அகந்தையும், அருவருப்புமான ஒரு செயல். இதில் தவறேதுமில்லை என பலர் கூறிய போதிலும், சுவிசேஷ ஆதாரம் எதுவும் இன்றி கிறிஸ்துவுக்கு ஒரு உருவத்தை நாம் உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது தான் தவறு. இந்தப் படங்களை ஏற்றுக் கொள்வது என்றால், கண்டு, தொடக்கூடியவற்றிற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று அர்த்தம். இதுவே விக்கிரக ஆராதனையாகும். (1 கொரி 10 : 14). எப்படி? நாம் அதை பாதுகாக்கிறோம்; மதிக்கிறோம்; கனம் செலுத்துகிறோம்; வீட்டிலே தனியிடம் ஒதுக்கி பயபக்தியுடன் வைக்கிறோம். அதைப் பற்றி யாராவது குறை கூறினால் அல்லது அதை சேதப்படுத்தினால் நமக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. எனவே, ஒரு கிறிஸ்தவனை இப்படங்கள் எப்படி ஆட்டிப் படைக்கின்றன என்று பாருங்கள்!

அவருடைய படங்களை நாம் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நமது கர்த்தர் விரும்பியிருந்தால், அவருடைய சரியான உருவத்தை நமக்கு அளித்து, கற்பனை உருவங்களை நாம் உருவாக்குவதை தடுத்திருப்பார் என்று உங்களால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லையா? நிச்சயமாக தந்திருப்பார். ஆனால் அவ்வாறு அவருடைய படம் எதுவையும் நமக்குத் தராததிற்குக் காரணம், நாம் அவருடைய படத்தை வைத்திருக்க அவர் விரும்பவில்லை; அவருடைய படத்தை வணங்கி, ஆராதித்துக் கொண்டிருப்பார்கள் என கர்த்தருக்கு தெரியும் என்பதை நீங்கள் அறியவில்லையா? அவ்வாறு ஒரு படம் நமக்குத் தரப்படாமலிருக்கும் போதே, மனிதன், கர்த்தர் எப்படி இருந்திருப்பார் என கற்பனை செய்து படங்களை உருவாக்கி, அதை விக்கிரக ஆராதனையாக மாற்றிவிட்டிருக்கிறான்.

கர்த்தரின் கற்பனைப் படங்களை மனிதன் வணங்குவதோடு, அவர் தலையில் நீண்ட கூந்தல் வைத்திருப்பது போல வரைந்துள்ளான். ஒரு மனிதன் நீண்ட தலைமயிர் வைத்திருப்பது அவனுக்குக் கேவலம் என கிறிஸ்துவின் வசனம் கூறும் போது (I கொரி. 11 : 14), கிறிஸ்து இவ்வுலகில் நீண்ட தலை மயிர் வைத்திருந்தார் என எப்படி, யார் முடிவுக்கு வந்தது? எனவே, கிறிஸ்துவைக் காட்டும் அநேக படங்கள் அவரைப் பற்றிய தவறான எண்ணங்களை உருவாக்குகின்றன. நிச்சயமாக, சுவிசேஷத்தின் உபதேசத்திற்கு இது விரோதமானது. இவற்றை ஒதுக்கித் தள்ள இதுவும் ஒரு காரணம்.

நீங்கள் கர்த்தரின் சபையிலே ஒரு அங்கத்தினராக இருந்து, கிறிஸ்துவின் படங்களை உங்கள் வீடுகளில் வைத்திருந்தால், உடனே அவற்றை அப்புறப்படுத்துங்கள். அதேபோல, கிறிஸ்துவின் படங்கள் அச்சிட்ட காலண்டர்களையும் அகற்ற வேண்டும். இவைகளும், கிறிஸ்துவின் சுருபங்களும், சிலைகளும், அல்லது வேறு மத அடையாளங்களாக இருப்பினும், அவை அனைத்தும் அழிக்கப்பட வேண்டும். (1 யோவான் 5 : 21). இவை எதுவும் கிறிஸ்துவை பிரதிநிதித்துவப்படுத்தாது. கர்த்தரிடம் நாம் நெருங்கிச் செல்ல, அவை நமக்கு உதவாது. ஆழமான ஆவிக்குரிய விதத்தில் நாம் வாழ எவ்விதத்திலும் அவை உதவாது. அவற்றை பயன்படுத்த கர்த்தர் நமக்கு கட்டளையிடாத போது, நாம் எப்படி அவற்றை உபயோகிக்கலாம்?

படங்கள், சுருபங்கள், சிலைகள், விக்கிரகங்கள் யாவும் கிறிஸ்துவைப் பற்றிய தவறான எண்ணங்களை மட்டுமே நமக்கு அளிக்கின்றன. கடைசியாக, கிறிஸ்துவை விட்டு விட்டு, அவரை பிரதிநிதித்துவப்படுத்தும் படங்கள்,

சுருபங்கள் மேல் நமது மனது செல்லுகிறது. அதன் விளைவாக, நாம் அவற்றைப் பத்திரப்படுத்துகிறோம், தொட்டு முத்தம் செய்கிறோம், கனம் பண்ணுகிறோம், உதவிக்கு அழைக்கிறோம். இப்படியாக கர்த்தரின் இடத்தை ஒரு விக்கிரகத்திற்குக் கொடுத்து விடுகிறோம். (கலா. 5 : 20).

படங்கள், சுருபங்கள், சிலைகள் போன்றவை கர்த்தரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால் அதற்கு எவ்வித சுவிசேஷ ஆதாரமும் கிடையாது. எனவே, நீங்கள் கர்த்தருடைய அதிகாரமின்றி அதை செய்கிறீர்கள். நீங்கள் நீதிமானாக இருந்தால், இப்படிப்பட்ட சகல படங்கள், சுருபங்கள், விக்கிரகங்கள். இதர இதுபோன்ற மத அடையாளங்கள் அனைத்தையும் உடனே அகற்றிப் போடுங்கள். எந்த விதத்திலும் அவற்றைச் சார்ந்திராதிருங்கள். (1 தெ.ச. 1 :9). இவை அனைத்தும் இன்றி, நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியும், பிறருக்கும் உங்களை கிறிஸ்தவர் என்று உணர்த்தவும் முடியும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்தவத்தை தினமும் கடைபிடித்தால், நீங்கள் கிறிஸ்தவரென்றும், ஒரு கிறிஸ்தவ இல்லத்துக்குச் சொந்தக்காரர் என்றும் சகலருக்கும் தெரிய வரும். கிறிஸ்துவின் பலவிதமான படங்கள், சுருபங்கள், சிலைகள் அனைத்தையும் நீங்கள் ஒரு இடத்தில் குவித்து வைத்திருப்பதை விட, கர்த்தர் பேரிலும் உங்கள் நண்பர்கள் பேரிலும் அது ஒரு மிகப் பெரிய அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். (1 பேதுரு. 4 : 1– 6).

உண்மையான கிறிஸ்தவன் மனிதனுடைய சகலவிதமான பழக்கங்களையும், பாரம்பரியங்களையும் சுமப்பதில்லை. அவசியத் தேவைகள் என்று மத உலகம் நினைக்கிற இப்படிப்பட்ட சகல காரியங்களிலிருந்தும் அவன் விடுபட்டிருக்கிறான். எனவே தான் தூய புதிய எற்பாட்டுக் கிறிஸ்தவம் மிகவும் வித்தியாசமாகவும் புத்துணர்ச்சி ஊட்டுவதாகவும் இருக்கிறது. சகலவற்றிற்கும் மேலானதாக அது இருப்பதை சோதித்து உணர்ந்து பாருங்கள்.

J.C. சோட்

*வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.*

சங்கீதம் 139 : 24

## பெண்கள் பகுதி

# " பாலிய ஸ்திரீ "

**III. பாலிய ஸ்திரீகள் தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.**

தெளிந்த புத்தி என்பது புத்திசாலியான, சிந்தனையுள்ள, தன்னடக்கமுள்ள ஒரு குணமாகும். தெளிந்த புத்தியுள்ள ஸ்திரீ தன் பொறுப்புகளை மிக கவனமாக எடுத்துச் செயல்படுகிறாள். தெளிந்த புத்தி என்பது அவளின் பூரணத்துவத்துக்கு ஓர் அடையாளமாகும். தெளிந்த புத்தியுடன் இருக்க வேண்டுமென்பது எப்போதும் ஒரு நீளமான முகத்துடன் இருப்பதல்ல, எதிர்மறையான எண்ணத்துடனோ, அல்லது, கசப்பான செய்கையுடனோ இருப்பது தெளிந்த புத்தியாகும். சொல்லப்போனால், சரியான சூழ்நிலைகளில் மகிழ்ச்சியோடு இருந்து நம்முடைய தெளிந்த புத்தியை வெளிக்காட்ட வேண்டும். அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் எத்தியோப்பிய மந்திரி எவ்வாறு சுவிசேஷத்தைக் கேட்டான், தான் கேள்வியுற்ற சுவிசேஷத்திற்கு எவ்வாறு கீழ்ப்படிந்தான், என்று வாசிக்கிறோம். வசனம் 39-ல் ஞானஸ்நானத்திற்கு பிறகு சந்தோஷத்தோடே திரும்பிச் செல்கிறான். தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை உணர்ந்து, அவற்றை தலையானதாக கருதி, கீழ்ப்படிந்து பின்பு மகிழ்ச்சியடந்தான். இதுதான் தெளிந்த புத்திக்கு அடையாளம், பெண்களாகிய நாமும் கூட தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க கற்றுக் கொள்வோம்.

**IV. பாலிய ஸ்திரீகள் கற்புள்ளவர்களாக இருக்க வேண்டும் :-**

கற்பு என்ற சொல்லுக்கு தூய்மை என்பது பொருள். பெண்கள் தங்கள் திருமணத்தின் போது எடுத்துக் கொள்ளும் வாக்குறுதிக்கு நம்பகமானவர்களாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துவது போல இவ்வசனப் பகுதி கொடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு கூட தூய்மை என்பது நம் செயலிலும், நம் உடையிலும், நம் எண்ணத்திலும் காணப்பட வேண்டும். வாழ்க்கை தூய்மையாக இருக்க வேண்டுமானால் நம் இதயத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளல் வேண்டும். தூய்மையாய் இராத எவரும் தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்திரமடைவதில்லை என்று எபே: 5 : 5-ல் வாசிக்கிறோம்.

## V. பாலிய ஸ்திரீகள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாய் இருக்க வேண்டும் :

பெண்களின் இருப்பிடம் வீடு, வீடு தான் அவளின் ராஜ்ஜியம். அந்த ராஜ்யத்தில் வேறு எதுவும் நுழைந்து விடாதபடி பாதுகாக்க வேண்டியது அவளுடைய வேலை எந்த ஒரு தீமையான செயலும் வீட்டிற்குள் அணுக அவள் அனுமதிக்கவே கூடாது. தன் பிள்ளைகளின் நண்பர்கள் யார்? என்பதை அவள் கவனித்தாக வேண்டும். தன் பிள்ளைகள் என்ன புஸ்தகத்தை வாசிக்கிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். வீட்டைப் பாதுகாத்தல் என்ற வேலையில் இவைகளும் அடங்குகின்றன. ஒரு பெண் தன் வெளியுலக சாதனைகளால் அறியப்படுவதைக் காட்டிலும் தன் குடும்பத்தில் காட்டும் சாதனைகளால் அறியப்படுவதே சிறந்தது. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் பிள்ளைகள் ஒழுக்கமாக வளர்க்கப்பட முடியாமைக்கு காரணம் அதிகப்படியான பெண்கள் வீட்டில் தங்காமல் வெளி வேலைக்கு செல்வதே யாகும். ஒரு குழந்தை தேவனுடைய வசனத்தின்படி சீராக வளர்க்கப்பட வேண்டுமானால் அது தன்னுடைய அதிகப்படியான நேரத்தை தன் தாயுடன் கழிக்க வேண்டும். ஒரு தாயாகவும், மனைவியாகவும் இருக்கும் பெண் தன் வீட்டில் இருந்து செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல் மற்ற பல நல்ல காரியங்கள் செய்தாலும் அவளால் தேவன் எதிர்பார்க்கும் ஒரு நல்ல கிறிஸ்தவ குடும்பத்தை கட்டவே முடியாது.

## VI. பாலிய ஸ்திரீகள் நல்லவர்களாக (அல்லது) அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் அன்பாக இருக்க வேண்டும் என்று அநேக இடங்களில் வேத வசனம் கட்டளையிட்டுக் கொண்டு இருக்கிறது. எபேசியர் 4 : 32, கொலோசியர் 3 : 12, 13 ஆகிய வசனப் பகுதிகள் ஒருவரிலொருவர் எவ்வாறு அன்பாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. குடும்பத்தின் சீதோஷ்ண நிலையே ஒரு பெண்ணின் செயலால் தான் கட்டுப்படுத்தப்படுகிறது, ஆத்திரமும் அவசரமும் கொள்ளாமல் அமைதியாக. அன்பாக தன் குடும்பத்தின் மகிழ்ச்சியை நிர்ணயிக்க பெண் தன்னை தயார் செய்து கொள்வது அவசியம்.

## VII. பாலிய ஸ்திரீகள் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு கீழ்ப்படிகிறவர்களாய் இருக்க வேண்டும்.

சில பெண்களுக்கு இக்கட்டளை கொஞ்சம் பிடிக்காத ஒன்றாகக் கூட இருக்கலாம். ஏன்? சில சமயங்களில் கிறிஸ்தவப் பெண்கள் கூட இதை ஏற்க மறுக்கிறார்கள். ஆனால் இது தேவனுடைய திட்டமாகும். ஒரு முறை ஒரு பெண்

இவ்வாறாக கூறினாள், "என் கணவன் ஒரு வேளை தலையாக இருக்கலாம்; ஆனால் நானோ கழுத்தாக இருந்து அந்த தலையை சுழல வைக்கிறேன்!! என்று. எல்லா அதிகாரமும் அவள் தான் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை இங்கே காணமுடிகிறது. நம்முடைய இச்செயல் நம் பிள்ளைகளை பாதிக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம். இங்கே சரி பாதி என்ற பேச்சிற்கே இடமில்லை. மாறாக தேவனுடைய திட்டத்திற்கு முழுவதும் கீழ்ப்படிந்து அவரை மகிழ்ச்சியடையச் செய்து விடுவோம். ஆதியிலிருந்தே பெண்களைப் பற்றிய தேவனின் திட்டம் என்ன? அவளை சிருஷ்டித்ததின் நோக்கம் யாது? ஆதி 2 :18 ஆணுக்கு ஏற்ற துணையாக பெண் படைக்கப்படுகிறாள்" என்று பார்க்கிறோம் I கொரி 11 : 9 ஸ்திரியே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்" என்று கூறுகிறது. புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் பெண்கள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டுமென்று கூறப்படுகிறார்கள். I பேதுரு 3:6, "அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்கு கீழ்ப்படிந்திருந்தாள்,"

கீழ்ப்படிவது என்றால் எந்தெந்த காரியங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும்? எபேசியருக்கு எழுதின நிருபம் 5ம் அதிகாரம் 24ம் வசனத்தில், "சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று வாசிக்கிறோம். எனவே ஆவியானவர் கொடுத்த வசனத்துக்கு கீழ்ப்படிவோம். மேற்கண்ட காரியங்கள் அனைத்தையும் தேவன் கிறிஸ்தவ பெண்களாகிய நம்மிடம் எதிர்பார்க்கிறார். அதன்படி செய்யாமற் போகும் போது வேத வசனத்தை தூஷிக்கிறவர்களாக நாம் மாறிவிடுகிறோம். நிச்சயமாக இதை வாசித்து ஒவ்வொருவரும் இன்று ஒரு சவாலை எடுத்திருப்போம் என்று நம்புகிறேன். தேவன் எதிர்பார்க்கும் பெண்ணாக திகழ என்னென்ன தேவையான மாற்றங்களை எடுக்க வேண்டுமோ அதையெல்லாம் எடுத்து தேவனின் திட்டத்தை நிறைவேற்றுவோம்.

"கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு மகிமையைச் சேர்க்கும் வண்ணம் நம் வாழ்க்கைத் தரத்தை அமைத்துக் கொள்வோம்", – ஆமென்.

சாரோன் காயின் ரேச்சல் ராஜ நாயகம்

## பிரசங்கியார் பகுதி

# 1. பிரசங்கியின் ஊழியமும் அதன் தன்மையும்

பிரசங்கியின் ஊழியமும் அதன் தன்மையும் அறிந்து கொள்ள நாம் புதிய ஏற்பாட்டைப் பார்க்க வேண்டும். புதிய ஏற்பாட்டை படிக்கும்போது பிரசங்கியின் ஊழியம் ஓர் உன்னதமான 'சேவை' என்று அறிந்து கொள்ளலாம்.

முதன் முதலாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உன்னதமான ஊழியத்தை (சேவை) செய்தார் . . . "மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகவும் வந்தார்" என்று இயேசு கூறினார். (மத் 20 : 28) மேலும் லூக்கா எழுதும் பொழுது இயேசு பணிவிடைக்காரனைப் போல இருந்ததாக எழுதினார். (சேவை) (லூக்கா 22 : 26, 27) . ஆகவே ஊழியம் என்பது பிறருடைய நன்மைக்காகத் தன்னைத்தான் மனப்பூர்வமாக ஒப்புக் கொடுத்து பிறருக்கு எல்லா விதத்திலேயும் சேவை செய்வதேயாகும்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறருடைய நன்மைக்காக அதாவது நமது பாவங்களுக்கு அவர் தண்டிக்கப்பட்டார். நாம் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட அவர் தாமே தம் ஜீவனையும் கொடுத்தார். நாம் அவரைப் போலவே ஜீவனைக் கொடுக்க இயலாது. (மத் 20: 22) ஆனால் பிறருக்காக நம் சுகம், செல்வம் இவைகளை தியாகம் செய்ய முடியும். தியாக மனப்பான்மையோடு செய்யப்படும் ஊழியம் மனுஷர்கள் மத்தியில் நல்ல மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். (ரோமர் 4 : 18). ஆனால் வெறும் பெயருக்காகவும், புகழுக்காகவும் செய்யப்படும் ஊழியம் என்றைக்குமே நிலைத்திருக்காது. மணல் மீது தன் வீட்டைக் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு இப்படிப்பட்டவர்கள் ஒப்பாவார்கள். பிரசங்கியின் ஊழியம் என்பது கலைந்து போகின்ற மேகங்களைப் போல் இல்லாமல் கன்மலையின் மீது அஸ்திவாரம் போட்டு கட்டப்பட்டதாக இருக்க வேண்டும்.

பிரசங்கியின் வேலை பிறருக்கு உதவி செய்வதேயாகும். மனுமக்களின் சகாயரும் மீட்பருமாகிய இயேசுவினிடத்திற்கு மக்களை வழி நடத்துவதும்

அவருடைய வசனத்தின் பொருளை அறிந்து அதை அன்றாட வாழ்க்கையில் அவர்கள் கைகொள்ள உதவி செய்வதே ஒரு போதகனது பிரதான கடமையாகும். "நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்பு கூறுகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்பு கூறப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவு பண்ணவும், செலவும் பண்ணப்படவும் விரும்புகிறேன்" (2 கொரி 12 : 15) இந்த வேத வசனத்திலிருந்து பிரசங்கிக்கு விசுவாசிகளின் அன்பு குறைவாகவே இருந்திருக்கிறது இருப்பினும் பிரசங்கி இதினிமித்தம் துக்கப்படாமல் சந்தோஷப்பட்டு தன்னையே விசுவாசிகளுக்கு செலவு பண்ணும்படி ஒப்புக் கொடுக்க வேண்டும். ஊழியம் என்பது வருமானத்தை பெருக்கிக் கொள்ளுவதல்ல அது சேவையிலே செலவுப் பண்ணப்படத்தக்கது.

பிரசங்கி தனக்காக தன் குடும்பம், தன் உறவினர் என்று கிணற்றுத் தவளையாயிராமல் தன் சுய விருப்பங்களை எல்லாம் கிறிஸ்துவோடு சிலுவையில் அறைந்துவிட்டு கிறிஸ்துவின் விருப்பத்தின்படி செய்ய தன்னை மாற்றிக் கொண்டவராக இருக்க வேண்டும். (கலா 2 : 20).

பிரசங்கி தனது ஊழியத்தின் தன்மையை பூரணமாக அறிந்திருக்க வேண்டும். அதற்கு தனக்கு முன்பாக வைத்துக் கொள்ள வேண்டிய நோக்கத்தை கவனிக்க வேண்டும். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் அப்போஸ்தலருடைய பிரசங்கங்கள் அனைத்தும் கிறிஸ்துவைக் குறித்தும் அவர் மூலமாய் இரட்சிக்கப்படுவதைக் குறித்தும் அதிகமாகப் படிக்கலாம். அவர்களின் பிரசங்கத்தைக் கேட்டு விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறுவது. இதுவே தேவனுடை திட்டம். இதற்கு கீழ்படிய வேண்டும் அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்கள். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதில் அவர்கள் தங்களுக்கு நேரிடும் துன்பங்களை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. சுவிசேஷத்தைக் கூறி மக்களுக்கு நன்மையை வருவிக்க வேண்டும் என்பதையல்லாமல் வேறொன்றைக் குறித்தும் அப்போஸ்தலர்கள் கவலைப்படவில்லை. அவர்கள் தங்கள் பெயர் பிரஸ்தாபத்திற்காகவும் சாதுரியப் பிரசங்கிகள் என்ற புகழ்ச்சிக்காவும் உழைக்கவில்லை. அப்போஸ்தலர்கள் இப்பொழுது நமக்கு அவர்களின் பாடுகளையும், துன்பங்களையும் வைத்து இருக்கிறார்கள். நாம் அவர்களைப் போல கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறுவதில் பயப்படாமல் தைரியமாகக் கூறி மக்களை அதற்கு கீழ்ப்படியும்படி உழைப்போம். அதன் மூலமாய் வருகின்ற பாடுகளையும், துன்பங்களையும் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு நமது நோக்கத்தை நிறைவேற்றுவோம். இப்படி மக்களை தேவனிடத்தில் திருப்புவதை முதலாவது நன்மையாக கருத வேண்டும்.

பிரசங்கி, தனது ஊழியத்தின் தன்மையைக் காப்பாற்ற ஊழியம் குற்றம் சாட்டப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியம் குற்றப்படாதபடிக்கு அவர்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல் எந்த நிமிஷத்திலேயும் தங்களை தேவ ஊழியக்காரராகவே விளங்கப் பண்ணினார்கள். இதனால் அவர்கள் எல்லாவற்றிலும் நிஜஸ்தராக காண்பித்தார்கள். (2. கொரி 6 : 3 – 10). இன்று அநேகருடைய ஊழியங்களும் ஊழியத்தின் தன்மைகளும் பாதிக்கப்பட்டிருப்பதற்கு முக்கிய காரணம் அவர்கள் தங்களை நிஜஸ்தராக காண்பிக்காததினாலே. எனவே ஊழியக்காரர் எப்பொழுதும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதைவிட ஊழியத்தையே காப்பாற்றி அதன் தன்மையை மாசுபடுத்தாமல் பரிசுத்தமாக செயல்பட அதற்காக பிரயாசப்பட வேண்டும்.

பிரசங்கி உணவுக்காகவும், உடைக்காகவும் கவலைப்படாமல் ஊழியத்தை நிறைவேற்றுவதே உணவாக எண்ணிக் கொள்ள வேண்டும். ஒருவேளை போஜனத்திற்காக ஆசீர்வாதத்தை இழந்துபோன சீர்கெட்ட ஏசாவைப் போல வயிற்றுக்காக வாழாமல், பசியோடும், பட்டினியோடும், கண்ணீரோடும் ஊழியத்தையே முதன்மையாகக் கொண்டு ரத்த சாட்சியாக மரித்த அப்போஸ்தலர்களை மாதிரியாக நோக்குவோம். அப்பொழுது நமது ஊழியமும் அதன் தன்மையும் பாதிக்கப்படாமல் இருக்கும்.

K. பாஸ்கர்
கோவில்பட்டி

## உங்கள் கவனத்திற்கு

*கர்த்தருக்குச் சித்தமானால் வரும் புத்தாண்டிலிருந்து, தெரிந்து கொள்ளுங்கள் என்ற புதிய பகுதி ஆரம்பமாக உள்ளது. என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.*

ஆசிரியர்

# "முழு நிச்சயமாக நம்பினார்கள்"

"ஆபிரகாம் . . . தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத் தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது". (ரோமர் 4 : 20 –22).

ஒரு வாரிசைப் பெற்றுக் கொள்ளுவதற்கு எதிராக, மனித ஆற்றல் அனைத்தும் மடிந்து போன தருணத்தில், ஒரு வாரிசை அளிப்பதாக தேவன் வாக்குத்தத்தம் செய்தபோது ஆபிரகாமின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை அப்போஸ்தலர் பவுல் இங்கு விளக்கிக் காட்டுகிறார். (ரோமர் 4 : 18 –20). ஆபிரகாம் "அவிசுவாசமாய் சந்தேகப்படாமல்" இருந்ததாகவும், "ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்றும் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது.

நம்மில் ஒவ்வொருவரும் செய்வதைப் போல, சில தவறுகளை ஆபிரகாமும் செய்த போதிலும், "தேவன் வாக்குத் தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்று முழு நிச்சயமாக நம்பினபடியால்" அவரை தேவன் நீதிமானாக உயர்த்தியதைக் கவனியுங்கள். மக்கள் தடுமாறி, தங்கள் வாழ்வில் தவறுகளைச் செய்த காலங்களைப் பற்றி எபிரேயர் 11ம் அதிகாரத்தைப் படித்து, சிந்தியுங்கள். ஆனால் "இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றிருந்தார்கள்" என்பது பெரும்பாலான பொதுப்படையான உண்மையாகும். (எபி. 11 : 39). கிறிஸ்தவர்களாக இருக்க எவ்வளவு தகுதியற்றவர்களாக நம்மைத் தாமே நாம் கருதிக் கொண்ட போதிலும், நமக்குக் கிடைக்கும் பாடமும், வியப்புமிக்க ஆறுதலும் என்னவென்றால், ஆபிரகாமைப் போல தேவனிடத்தில் அது நமக்கு நீதியாக எண்ணப்படும்". (ரோமர் 4 : 23, 24) "தேவன் வாக்குத் தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்வராயிருக்கிறார் என்று முழு நிச்சயமாக நாமும் நம்புகிறோம்". ஏனெனில், "நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை நாம் விசுவாசிக்கிறோம்." (ரோமர் 4 : 24).

இதற்கு எவ்வளவு அருமையான விளைவு தொடருகிறது என்பதை ரோமர் 5ம் அதிகாரத்தின் முதல் வசனங்களில் காணலாம். ஆபிரகாமுடைய

விசுவாசத்தைப் பற்றியும், கிறிஸ்தவர்கள் எவ்வாறு அதில் பங்கு பெறுகின்றனர் என்பதைப் பற்றியும் எழுதிய பின்பு, பவுல் தொடர்கிறார். "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம்". (ரோமர் 5 : 1 – 2).

நமது விசுவாசத்தில் நிலைத்திருக்க ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்துவோம். "நாம் இளைப்புள்ளவர்களாய் நமது ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு . . . இயேசுவை நோக்கி நாம் பார்ப்பதுவே" இதைச் செய்ய சிறந்த வழியாகும். (எபி. 12 : 1 – 3). ஆனால், பல துன்பங்களையும் எதிர்த்து வெற்றி கொண்ட, வேதாகமத்தில் காணப்படும் விசுவாசமுள்ள ஆண்களும், பெண்களுமான பலருடைய உதாரணங்களையும் கூட நாம் நமது மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், அவர்கள் "முழு நிச்சயமாக நம்பினார்கள்". நாமும் அவ்வாறு நம்பலாம்.

தமிழில் : எஸ்.எஸ். ராஜன்.

## ஆபிரகாமின் விசுவாசம்

*தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்,*

*தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.*

ரோமர் 4 : 20, 21.

# அந்நிய பாஷை பேசுதல்

மதப்பற்றுள்ள நம்மில் அநேகர் அந்நிய பாஷையில் அல்லது, அந்நிய மொழியில் பேசுவதாகக் கூறுகின்றனர். தேவனுடைய ஆவியானவர் தங்கள் மூலமாக பேசுவதாக விளக்கம் கூறுகின்றனர். மேலும் அவர்கள் தாங்கள் பேசுவது தங்களுக்கே தெரியாது என்றும், கேட்பவர்களும் புரிந்து கொள்ள முடியாது என்றும், தேவன் மட்டும் அறிவார் என்றும் சொல்லுகின்றனர். ஆனால் வேதாகமம் எங்கும் இப்படிக் கூறுவதில்லை. அப்படிப்பட்டவர்கள் அந்நிய மொழியில் பேசுவதில்லை. தங்களையே வஞ்சிக்கிறார்கள். மொழியைப் பேசாமல் ஒருவித விநோதமான சப்தத்தை எழுப்பி, பிதற்றுவதைப் போல் செயல்படுகிறார்கள். வேதாகமம் அந்நிய மொழியைப் பற்றி பேசி இருப்பது உண்மைதான் (1 கொரி 14 : 2). அதிலும் பேசுகிறவன், தான் என்ன கூறுகிறேன் என்று அறிந்து இருந்தான். அதைக் கேட்பவர்கள் தான் புரியாமல் இருந்தனர். ஆகவே அவனுக்கு மாத்திரம் தெரிந்திருப்பதினால் மற்றவர்களுக்கு பிரயோஜனமில்லை. இதன் பலனாக, அப்படிப்பட்டவன் தேவனிடத்தில் பேசுகிறவனாயிருந்தான். அவனுக்கு பக்தி விருத்திக் கேதுவாக இருந்தது. ஆனால் கேட்பவர்களுக்கு ஒன்றும் புரியாததினால், அர்த்தமற்றதாக இருந்தது. (1 கொரிந்தியர் 14 : 4).

“அந்நிய பாஷை” என்று குறிப்பிடப்பட்டிருப்பது, புரிந்து கொள்ளக்கூடிய வார்த்தைகளை சுட்டி காட்டுகிறது. ஏனெனில், பவுல் கூறும் பொழுது, “அது போல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே” (1 கொரிந்தியர் 14 : 9) என்றார். தொடர்ந்து பவுல் கூறுவது, என்னத்தினாலெனில் நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான், ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன் நான் ஆவியோடும் பாடுவேன். கருத்தோடும் பாடுவேன்” (1 கொரிந்தியர் 14 : 14, 15). அந்நிய பாஷை என்பது இங்கு கேட்பவர்களுக்கு தெரியாத அந்நிய மொழி என்று பார்க்கிறோம். ஆகையினால் தான் பவுல் கேட்பவர்கள் புரிந்து கொள்ளுமளவு கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன், அப்படியே கருத்தோடும் பாடுவேன் என்றார்.

பவுல் அந்நிய பாஷையைப் பற்றி பேசும் பொழுது, மொழிகளைப் பற்றி கூறுகிறார். இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ

பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே. நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய். ஆகிலும் மற்றவன் பக்தி விருத்தியடையமாட்டானே. உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன். இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்'' (1 கொரிந்தியர் 14 : 16–19). தொடர்ந்து "மறு பாஷைக்காரராலும் மறு உதடுகளாலும் இந்த ஜனங்களிடத்தில் பேசுவேன். ஆகிலும் அவர்கள் எனக்குச் செவி கொடுப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வேதத்தில் எழுதியிருக்கிறதே அப்படியிருக்க, அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. தீர்க்க தரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் விசுவாசிகளுக்கே அடையாளமாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 14 : 21, 22)."

மேலும் 27ம் வசனத்தில் கூறுகிறார். "யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர் மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும் ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரிய பேசக்கடவன்" என்றார். அந்நிய பாஷை எனப்படுவது கல்லாத நேயர்களுக்கு, தெரியாத பாஷை. ஆகையினால், யாராவது அந்நிய பாஷையிலேயே பேசுகிறதுண்டானால், ஒவ்வொருவராக பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல் தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன். அதாவது, தங்களுடைய தனிப்பட்ட ஜெபத்தை ஏறெடுக்க கடவன்.

இப்பொழுது யாருக்கு அந்நிய பாஷை பேச வல்லமை உண்டு என்று பார்ப்போம். இது அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை கர்த்தர் அவர்களுக்கு வாக்குத் தத்தம் செய்திருந்தார். அதற்கு அடையாளமாக அவர்கள் அந்நிய பாஷை பேசினார்கள் (அப். 2 : 6). கொர்நெலியுவும், அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றனர். ஏனெனில் புறஜாதியினரும் யூதர்களைப்போல தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள் என்று காண்பிக்க. பிறகு அவர்கள் அந்நிய பாஷை பேசினார்கள் (அப். 19). அதன் பிறகு, அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை யார் மீது வைக்கிறார்களோ, அவர்களுக்கும் பரிசுத்த ஆவி அருளப்பட்டு, அவர்களும் அந்நிய பாஷை பேசினார்கள். (அப்போஸ்தலர் 19: 1– 7). இவர்களைத் தவிர வேறு யாருக்கேனும் இந்த வல்லமை கொடுக்கப்பட்டதா? இல்லை. வேதாகமத்தில் வேறு எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஏன், இவர்களுக்கு மாத்திரம் இவ்வல்லமை

கொடுக்கப்பட்டிருந்தது? உலகத்தின் பல பாகங்களுக்கு சென்று, மக்களுக்கு அவரவர்கள் சொந்த பாஷையிலே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க இது கொடுக்கப்பட்டது. எவ்வளவு காலம் இந்த வாக்குத்தத்தம் இருந்தது? புதிய ஏற்பாடு எழுதப்பட்டு புத்தக உருவத்தில் உலக மக்களுக்கு அளிக்கப்படும் வரை, "அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்". என்றார் பவுல் (1 கொரிந்தியர் 13 : 8 - 10; யாக்கோபு 1 : 25). இன்று அந்நிய பாஷை பேசும் வல்லமை யாருக்கும் கிடையாது. ஏனெனில் அதற்கு அவசியம் இல்லை. வேதாகமம், உலகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

அந்நிய பாஷை பேசுகிறோம் என்று கூறிக் கொள்பவர்களும் கூட, அநேக காரியங்களை புரிந்து கொள்வதில்லை.

1. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இவர்களுக்கு வாக்குத் தத்தம் பண்ணப்படவில்லை.
2. அப்போஸ்தலர்கள், தங்கள் கைகளை வைத்து, பரிசுத்த ஆவியின் வரத்தை கொடுப்பதற்கும், இன்று அப்போஸ்தலர்கள் யாரும் உயிரோடு இல்லை. ஆகவே யாரும் இன்று அப்படிப்பட்ட வரத்தை பெற்றிருக்க முடியாது.
3. அந்நிய பாஷையில் பேசுதல், என்றுமே மற்ற மொழியில் பேசுவதைக் குறிப்பிடும்.
4. அந்நிய பாஷை பேசுதல் அவிசுவாசிகளுக்கு அடையாளம். ஆனால் இன்று சபையில் விசுவாசிகள் முன்னிலையில் மாத்திரம் செயல்படுகிறார்கள்
5. இன்று, அந்நிய பாஷை பேசுபவர்களுக்கும் தாங்கள் பேசுவது என்ன என்று புரியாமல், அதை கேட்பவர்களுக்கும் [illegible] தேவனுக்கு தெரிந்திருக்கும் [illegible] பார்க்கலாம் [illegible] ஏற்பாட்டின் காலத்தில் இம்மாதிரி இரு[illegible] அப்படிப்பட்ட வல்லமை யா[illegible]திலும் இ[illegible]
6. பெந்தெகொஸ்[illegible] அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷை பேசிய விதமாய், இன்று அந்நிய பாஷை பேச முடியும் என்று சொல்லுபவர்களால் பேச முடிவதில்லை. அப்படிப்பட்டவர்களுடைய பிரதிநிதி பெற்ற பிரசங்கிமார்கள் இந்தியாவுக்கு வந்தால், மற்றவர்களைப்போல, தாங்களும் மொழி பெயர்ப்பாளர்களை வைத்துக் கொண்டே பிரசங்கம் செய்கிறார்கள். அந்நிய பாஷை பேசுகிறோம் என்று சிலர் கூறுபவர்கள், புதிய ஏற்பாட்டில் அந்நிய பாஷை பேசப்பட்டதைப் போல் செயல்பட முடிவதில்லை.

அப்படி என்றால் அநேகர் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். நீங்கள் வேதாகமத்தைப் படித்து, இதைக் குறித்த சத்தியங்களை அறிந்து கொள்ள வேண்டுமாய் உங்களை வேண்டுகிறோம். அந்நிய பாஷை பேசும் வரங்கள் இன்றும் நமக்கும் உண்டு என்று எண்ணி ஏமாறாதீர்கள். மற்றவர்களால் ஏமாற்றப்படவும் விட்டுக் கொடுக்காதீர்கள்.

(தமிழில் EZSR.).

## "அது அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது"

இயேசுவின் காலத்தில் பல தவறான கருத்துக்கள் உலாவி வந்தன. உலகம் தட்டையாக இருப்பதாக பலர் நினைத்தனர். அவர்களின் கூற்றுக்கு இயேசு எவ்வித மறுப்பும் தெரிவித்ததாக பதிவேடுகளில் காணப்படவில்லை. மற்றும் பலர் சூரியன் பூமியைச் சுற்றி வருவதாகக் கருதினர். அவர் தமக்குத் தாமே புன்முறுவல் பூத்துக்கொண்டார். வருந்தத்தக்க விதத்தில், மக்களின் மருத்துவ அறிவு வளர்ந்திருக்கவில்லை; அவர் தமது விவேகத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. அவர்களுடைய புவியியல் வரை படங்கள் முற்றிலும் தவறாக இருந்தன; அவர் அசைந்துகொடுக்கவில்லை. மதக்காரியங்களில் தவறான கருத்துக்களை அவர்கள் கற்றுக்கொடுத்தனர்; அவர் போதிக்கத் தொடங்கினார்!

அவர் காலத்திய மக்களுடன் ஒத்துப்போவதற்காக, அவர்களின் தவறான போதனைகளுடன் இணைந்து அவர் செல்லவில்லை என்பது சுவையான செய்தி அல்லவா? ஆவிக்குரிய தவறை அவர் கண்டித்தார். ஏனெனில் அது மிக ஆபத்தானது. உலகம் தட்டையாக இருக்கிறது என எண்ணிக்கொண்டிருப்பவன் அல்லது மேல்நாட்டு அரைக்கோணத்தை அறியாதிருப்பவன் பரலோகத்திற்குச் செல்ல கூடும். ஆனால் கிறிஸ்துவை விசுவாசியாதவரோ அல்லது தீச்செயல்களை புரிகிறவரோ அங்கு செல்ல முடியாது.

ஒருநாள், இயேசு ஒரு மலை மீது ஏறி அமர்ந்து, பிரசங்கிக்கத் தொடங்கினார் (மத்தேயு 5–7). "அது அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது எனும் பிரசங்கம் என்றுஅதை அழைக்கலாம். ஏனெனில், தவறான மத நிலைகளை அவர் வரிசையாக அடுக்கி, அவற்றைத் திருத்திச் சொன்னார். அவர் ஒரு அன்பான மனிதராக இருந்தார்; என்றாலும் தவறைக்கண்டிக்க அவர் தவறவில்லை. உண்மையில், ஆத்துமா, சத்தியம் ஆகியவற்றின் பேரிலுள்ள அன்பாலேயே அவ்வித நடவடிக்கைகளை அவர் எடுத்தார்.

"அது அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது" என்னும் பாடத்தை நாம் இப்போது பார்க்கலாம்: "ஒருவன் உண்மையுள்ளவனாக இருக்கும் வரை, அவன் எதை விசுவாசிக்கிறான் என்பதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை." என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நல்ல குணமுள்ள மனதனாக இருப்பது மட்டுமே போதுமானது என பலர் இன்று நினைக்கின்றனர்.

இயேசுவால் நாம் ஏற்றுக் கொள்ளப்பட, அவருடைய சகல சட்ட திட்டங்களுக்கும் நாம் கட்டுப்படத் தேவையில்லை என்று அவர்கள் திடமாகக் கூறுகின்றனர்.

## உண்மை அவசியம்

கிறிஸ்துவுக்கு ஒருவன் செய்யும் ஊழியத்தில் அவன் உண்மையுள்ளவனாக இருக்கவேண்டும். நேர்மையற்றவராக இருப்பின், அவன் எவ்வளவு அதிகமாக சத்தியத்தைக் கடைபிடித்தாலும், அவன் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார். (2 நாளாகமம்25:2). மாயக்காரராகிய பரிசேயரைக் கண்டிக்கும்போது, "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னை கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாக விலகியிருக்கிறது" என இயேசு குறிப்பிட்டார். (மத்.15:8), நாத்தான்வேலை "கபடமற்ற உத்தமன்" என அவர் பாராட்டினார். (யோவான்1:47). அவர் போதித்தபடி, அவர் நடந்தார். (1 பேதுரு 2:22).

பவுல் எழுதினார்: "கற்பனையின் பொருள் என்னவெனில்: சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே."(1தீமோ.1:5). பவுல் உண்மையுள்ளவராக இருந்தார்.(1தெச. 2:3-5). கொரிந்தியர்களுடைய நேர்மையை நிரூபிக்க அவர் அவர்களைக் கேட்டுக்கொண்டார். (2கொரி 8:8,24). பிலிப்பியர்கள் "துப்புரவானவர்களும், இடறலற்றவர்களாயும் இருப்பார்கள் என அவர் நம்பினார். (பிலி 1:11). வாலிபர்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாயும்(தீத்து2:6,7) தொழுது கொள்ளவும் (யோவான் 4:23,24) போதிக்கவும் (2 கொரி.2:17) கிறிஸ்துவ வாழ்க்கை வாழவும் (2 கொரி. 1:12) மக்களுடன் நல்லுறவு கொள்ளவும் (யூதா 9, 16 ,17) உண்மையுள்ளவர்களாக இருக்கவும் தேவன் எதிர்பார்க்கிறார்.

## சரியான கோட்பாடு அவசியம்

"உண்மை மட்டும் போதுமா?", என்பது அடுத்த கேள்வி. நூற்றாண்டுகளுக்கு முன்பு, பூமியின் ஒரு ஆரத்திற்கு கப்பலில் பயணம் செல்லவிருந்த கிறிஸ்டோபர் கொலம்பஸ், பூமியானது தட்டையாக இருக்கிறதென உண்மையிலேயே நம்பியிருந்த மக்களால் எச்சரிக்கப்பட்டார். இரத்தத்தை எடுத்தால் உயிரைக் காப்பாற்ற உதவும் என உண்மையிலேயே நம்பியிருந்த மருத்துவர்களால் ஜியார்ஜ் வாஷிங்டனுடைய வாழ்க்கை முதிர்வடையாமலேயே முடிந்து போயிற்று, என நம்பப்படுகிறது. லிங்கனை படுகொலை செய்ததின் மூலம் நாட்டுக்கு நன்மை செய்ததாக நினைத்தார் ஜான்வைக்ஸ் பூத் என்பவர்.

இதே போன்ற காரணம் மதத்திற்குப் பொருந்துகிறதா? வேதாகமம் என்ன சொல்லுகிறது? ஓய்வு நாளில் விறகுகளைப் பொறுக்கின மனிதன் உண்மையுள்ளவனாக இருந்தான்; என்றாலும் அவன் தேவனை வெறுப்பூட்டினான்.(எண்ணாகமம் 15:32–36). ஊசா தேவனுடைய பெட்டி அசைவதை நிறுத்த, தன் கையை நீட்டி அதைப் பிடித்தபோது உண்மையுடன் தான் அதைச் செய்தான்; ஆனால் அவன் தண்டனையடைந்தான்.(2 சாமுவேல் 6:6–7). கிறிஸ்துவர்களைத் துன்புறுத்திய தர்சு பட்டணத்து சவுல், உண்மையிலேயே தான் சரியாகச் செய்வதாகத்தான் எண்ணினான்.(அப் 23:1) ; என்றாலும் அவன் செய்தது தவறாக இருந்தது(அப்9:4).

சரியான கோட்பாட்டிற்காக வேதாகமம் மிகவும் அக்கரை காட்டுகிறது. "ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்"(மத்.24:4) என இயேசு கூறினார். "வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்காத படிக்கு சிலருக்குக் கட்டளையிட" தீமோத்தேயுவுக்குப் பவுல் கூறினார் (1தீமோ1:3) இயேசு சொன்னார்: " மனிதருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (மத்தேயு 15:9).

### *கீழ்ப்படிதல் அவசியம்*

சரியான கோட்பாடுடையவராக ஒருவர் இருக்கக்கூடும், அதை உண்மையிலேயே விசுவாசிக்கவும் கூடும், என்ற போதிலும் அவர் வீழ்ந்துபோவார். இரட்சிப்புக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியம். ஒரு சில ஆராதனைகளில் கலந்து கொள்வது அவர்களை இரட்சிக்கும் என சில கிறிஸ்தவர்கள் நினைக்கின்றனர். ஒரு கோழிக்கூட்டில் ஒருவர் உட்கார்ந்தால் எப்படி கோழியாக மாற இயலாதோ, அதுபோல சபைக் கட்டிடத்தில் உட்காரும் ஒருவர் கிறிஸ்தவனாகிவிட முடியாது! தேவனுடைய சத்தியத்திற்கு கீழ்ப்படிவதும் அவருடைய கருணையை ஏற்று நடப்பதும் ஒருவனை இரட்சிக்கும்!

கீழ்ப்படிதல் இல்லாமல் ஒருவன் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க இயலாது என இயேசு கூறினார்: "பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை." (மத்தேயு7:21). நியாயத் தீர்ப்பு நாளிலே தங்களுக்கு அளிக்கப்படும் தீர்ப்பைக் கண்டு ஆச்சரியப்படும் உண்மையுள்ள மக்களைக் காண முடியும்.(மத்தேயு7:22–23) வருத்தப்பட வேண்டிய காரியம் என்னவென்றால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் எரிநரகத்தை

எதிர்நோக்க வேண்டியவர்களாக அவர்கள் இருப்பார்கள்.(2தெச.1:7–9; யோவான்12:48), அன்று இயேசு கேட்ட ஒரு கேள்வியை இன்றைய மதத்தலைவர்கள் பலரிடம் திருப்பிக் கேட்க வேண்டியதாக இருக்கிறது: “என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?” (லூக்கா 6:46;19:19–22). தங்கள் நடவடிக்கைகளால் சிலர் பார்வோனைப் போலக் கேள்வி கேட்கின்றனர்: “கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்?” (யாத் 5:2). “அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்” (யாக்கோபு 1:22).

கீழ்ப்படிதல் இல்லாமல் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட ஒருவனால் முடியாது. பவுல் சொன்னார்: “முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்” (ரோமர் 6:17). இரண்டு காரியங்களின் காரணமாக ரோமக் கிறிஸ்தவர்கள் இனி பாவத்தில் (பாவத்திற்கு அடிமைகளாக) நீடிக்கவில்லை என்பதை கவனத்துடன் நோக்கிப்பாருங்கள். முதலாவது, தங்கள் இருதயத்திலிருந்து உண்மையாக, கீழ்ப்படிந்தனர்; இரண்டாவதாக, அவர்கள் கீழ்ப்படிந்தது தேவனுடைய கோட்பாட்டின் சாயலுக்கு – சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தனர். இந்த சந்தர்ப்பத்தில், இயேசுவின் சிலுவை மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றை இக்கோட்பாட்டின் சாயல் குறிப்பிடுகிறது. பழைய மனிதனை (வாழ்க்கை முறையை) அவர்கள் சிலுவை மரணத்திற்குள்ளாக்கி, தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டு, (திருமுழுக்கு) பின் உயிர்த்து (தண்ணீரிலிருந்து எழுந்து) ஒரு புது வாழ்வை நோக்கி நடந்தனர்(ரோமர் 6:3,4).

கீழ்ப்படிதல் இல்லாமல் பரிசுத்தமான ஆத்துமாவை ஒருவன் பெற இயலாது. உண்மையும், அதாவது ‘சரியான’ கோட்பாட்டில் இருத்தலும், கீழ்ப்படிதலும் தேவை என பேதுரு கற்பித்தார். “ ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சினேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்” (1 பேதுரு 1:22). இரட்சிப்பானது (சுத்தப்படுத்தப்பட்ட ஆத்துமாக்கள்) சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதோடு (புதிய ஏற்பாட்டு உபதேசத்தோடு ஒத்துப்போதல்) இணையப் பெற்றிருப்பதைக் கவனியுங்கள். மேலுமாக,

கிறிஸ்தவர்கள் மாயமற்ற (பாசாங்கு செய்யாத) அன்பை செலுத்தவும், சுத்த (உண்மையான) இருதயங்களை உடையவர்களாஇருக்கவும் வேண்டும்.

கீழ்ப்படிதல் இல்லாமல், கிறிஸ்துவிடம் தனது அன்பை ஒருவன் காட்ட இயலாது. (யோவான் 14:15) யோவான் கூறினார்: "அவருடைய கற்பனைகளை நாம் கைக் கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை." (1 யோவான் 2 : 3, 4) சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்த பின்னர் மாத்திரமே (எபி. 5 : 8, 9), சத்தியம் மனிதர்களை விடுதலையாக்கும். (யோவான் 8 : 32).

கிறிஸ்துவின் வார்த்தையை நம்புங்கள்; ஏனெனில் "அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. "ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாக நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்". (வெளி. 22 : 14).

ALLEN WEBSTER — தமிழில் : எஸ்.எஸ். ராஜன்

## சபை கூடிவருவதின் அவசியம்

*மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்டும்படி ஒருவரையொருவர் கவனித்து,*

*சபை கூடுவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல் நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம் நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்.*

*சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்.*

*நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.*

எபிரேயர் 10 : 24-27

# பல இடங்களிலும் சபை ஒன்றே!

"சபை", "சபைகள்" என்னும் இரு பதங்களை புதிய ஏற்பாடு பயன்படுத்துகிறது. கிறிஸ்து பல சபைகளை உண்டாக்கினாரா அல்லது ஒரே ஒரு சபையை மட்டும் உண்டாக்கினாரா?

முதலாவதாக, "சபை" என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசிம். புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. "அழைக்கப்பட்டவர்கள்" என்ற அர்த்தமுள்ள "எக்லீசியா" எனும் கிரேக்க வார்த்தையிலிருந்து, பிற மொழி வேதாகமங்களில் "சபை" என மொழியாக்கம் செய்யப்பட்டது. அழைக்கப்பட்டு கூடி வரும் மக்களை அது குறிப்பிடுகிறது. உதாரணமாக, எபேசு நகர எழுத்தர் கூறினார்: "நீங்கள் வேறே யாதொரு காரியத்தைக் குறித்து விசாரிக்க வேண்டியதானால், அது நியாய சங்கத்திலே தீர்க்கப்படும். "(எக்லேசியா). – அப்போஸ்தலர் 19:39.

"சபை" என்றால் மக்கள்; மனிதனால் உண்டாக்கப்பட்ட கட்டிடம் அல்ல. கிறிஸ்தவர்களாலும் கிறிஸ்துவாலும் உண்டாக்கப்பட்டது சபை. பாவிகள் நற்செய்திக்குக் கீழ்ப்படியும் போது, அவர்கள் "கிறிஸ்தவர்கள்" ஆகின்றனர். (அப்.2:36–41; 11:26). ஒரு இடத்தில் கூடும் சகல உண்மையான கிறிஸ்தவர்களே அந்த இடத்தின் "சபை". அவர்களின் தலைவர் கிறிஸ்து. (பார்க்க: அப்.2:47; 5:11; 14:23,27; ரோமர் 16:5 எபே.1:22–23).

"வனாந்தரத்திலே இருந்த சபை (எக்லேசியா) என்பதாக பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் அழைக்கப்பட்டது. (அப்.7:38). வனாந்தரத்திலே தனியாக அலைந்து திரியாமல், தேவனுடைய ராஜ்யமாகிய கானான் தேசத்திற்குக் கூட்டிப்போக, எகிப்து நாட்டு அடிமைத்தனத்திலிருந்து மக்கள் வெளியே அழைக்கப்பட்டனர். வாழ்வில் தனியாக அலைந்து திரியாமல், கிறிஸ்துவில் ஐக்கியமாகி பரலோகத்திற்கு சேர்ந்து செல்ல, நாம் பாவத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்டுள்ளோம். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடி வந்து, ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தவும் ஆராதனையில் கலந்து கொள்ளவும் கர்த்தர் கிறிஸ்தவர்களுக்கு சபைக்கு கட்டளையிடுகிறார். அப்.20:7; 1கொரி.16:1–2; எபி.10:23–25). மனித உடலின் உறுப்புகளைப்போல இணைந்து செயல்படவும் நமக்கு அவர் கற்பிக்கிறார். (ரோமர் 12:3–8). "ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாகக் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப்

பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கு ஏதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது". (எபே.4:16). மக்கள் நற்செய்திக்குக் கீழ்ப்படியும் போதும் (அப்.2:47; 4:4; 5:14; 6:7; 11:21,24), அங்கத்தினர்கள் தேவனுடைய வார்த்தையைக் கற்று, அதற்கு முற்றிலுமாகக் கீழ்ப்படியும்போதும் சபை "வளருகிறது". (எபே. 4:13–16; கொலோ.1:9–12; எபி. 5:12–14; 1 பேதுரு 2:2: 2 பேதுரு 2:2; 2 பேதுரு 3:18).

ஆவிக்குரிய வாழ்வில், சிதறிப்போய் வித்தியாசப்பட்ட நாமகரணக் கூட்டங்களில் (மனிதன் உண்டாக்கிய சபைகளில்) சேர்ந்து விடாமலிருக்கவும், ஆனால் ஒரே சரீரத்தில் இணைந்திருக்கவும் கிறிஸ்துவின் சட்டங்களை மட்டுமே பின்பற்றவும், நாம் தவறிலிருந்து வெளியே அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்து மரணத்தை சந்திப்பதற்கு முந்தின இரவில் அவர் ஜெபித்தார். "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்." (யோவான் 17:21).

எனவே, கிறிஸ்து ஒரே ஒரு சபையை மட்டும் உடையவராக இருக்கிறார். அவர் எந்த நாமகரண சபைகளையும் உண்டாக்கவில்லை. "நாமகரண சபை" என்பது மனித பெயரில் குழுவைக் குறிக்கிறது. கிறிஸ்து ஒரே சபையைக் கட்டுவதாக வாக்களித்தார். "நான் என் சபையைக் கட்டுவேன்" (மத்தேயு 16:18). சபை கிறிஸ்துவின் "சரீரம்" (எபே. 1:22–23). மனித சரீரத்தைப் போல கர்த்தரின் சபை ஒரே தலையும் ஒரே சரீரமும் உடையதாக இருக்கிறது. கிறிஸ்து பல நாமகரணக் கூட்டங்களில் தலைவர் அல்ல. "ஒரே சரீரமும் ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும் உண்டு. (எபே.4:4–5). "ஒரே விசுவாசத்தை" (கிறிஸ்துவால் அளிக்கப்பட்ட நம்பிக்கைகளின் ஒரு கோர்வை) நாம் தொடர்ந்து பின்பற்றினால், நாம் அவருடைய சபையில் ஒரு அங்கமாக தொடருகிறோம்.

என்ற போதிலும், "கலாத்திய நாட்டிலுள்ள சபைகளுக்கு" (கலா1:2) என்பது போல வேதாகமம் "சபைகள்" என்றும் கூறுகிறது. ஆனால் இவை வித்தியாசப்பட்ட நாமகரணக் கூட்டங்கள் அல்ல. இந்த சபைகள் கலாத்திய நாட்டின் பல பகுதிகளில் இருந்தன. ஆனால் அவைகள் அனைத்தும் ஒரே சட்டத்தையே போதித்தன. பவுல் எழுதினார்:"சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் , சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே

உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்." (1கொரி1:10), மனிதன் உண்டாக்கும் மதப் பெயர்களும், மனிதன் உண்டாக்கும் சட்டங்களும் பிரிவினைகளை உண்டு பண்ணுகின்றன. மனிதனுடைய சட்டங்களைப் பின்பற்றினால், நமது ஆராதனை பயனற்றதாகி விடுகிறது. (மத் 15:9;) பார்க்க மத் 15:13) ஆனால் கிறிஸ்துவின் உபதேசங்களில் நாம் நீடித்திருந்தால், நாம் உண்மையிலேயே அவருடைய சீடர்களாக இருப்போம். (யோவான் 8 :3131–32), "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்.(2 யோவான்9).

நாம் கலாத்திய நாட்டில் இல்லாதிருந்தால், "கலாத்திய சபைகள்" என நாம் அழைக்கப்பட முடியாது. ஆனால் உண்மையிலேயே நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் "கிறிஸ்துவுக்குள்" இருக்கிறார். (ரோமர் 8:1 ; 6: 3–4). பூமியின் எந்தப் பகுதியில் வசித்தாலும், கிறிஸ்துவை உண்மையிலே பின்பற்றும் சபைகள் "கிறிஸ்துவின் சபைகள்" ஆகும் (ரோமர் 16:16).

**Royce Frederick**

**எஸ். எஸ். ராஜன்**

## எருசலேம் தேவாலயம்

1. முதலில், தாவீதின் குமாரனாகிய சாலமோன் இராஜாவால் கட்டப்பட்டது.

2. இரண்டாவதாக, பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டுபோகப்பட்ட யூதர்கள் திரும்பி வந்து கட்டினார்கள்.

3. மூன்றாவதாக, மகா ஏரோதுவால் கட்டப்பட்டது.

# கிறிஸ்து ஏன் மரித்தார்?

கிறிஸ்து மரித்தார். வேதாகமமும் உலக சரித்திரமும் ஒப்புக் கொண்டுள்ள ஒரு உண்மை இது. இதை மனதில் வைத்துக் கொண்டு சில காரியங்களை நாம் காண்போம்:

1. கிறிஸ்துவின் மரணமானது எல்லாருக்கும் ஏற்படுகின்றதைப் போன்ற சாதாரண ஒரு மரணம் அல்ல. பலர் வாழ்ந்து, மடிந்து போயிருக்கின்றனர். சகல மனிதர்களும் மரிக்க வேண்டும். (எபி. 9 : 27), என பரிசுத்த எழுத்தர் கூறுகின்றார். அப்படியானால், கிறிஸ்துவின் மரணத்தில் உள்ள சிறப்பு அம்சம் தான் என்ன? பலர் வாழ்ந்து மரித்தது போல அவர் வாழ்ந்து மரிக்கவில்லையா? ஆம்; ஆனால் அவருடைய வாழ்க்கை வித்தியாசமாக இருந்தது; அவர் மரிக்க வேண்டிய காரணமும் வித்தியாசமாக இருந்தது. அவர் பாவமற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்தார். மனிதனுடைய பாவங்களிலிருந்து அவனை விடுவித்து, காப்பாற்ற அவர் மரித்தார். (2 கொரிந்தியர் 5: 21).

2. கிறிஸ்துவின் மரணம் தீர்க்கதரிசனமாக முன் உரைக்கப்பட்டிருந்தது. ஏசாயா தீர்க்கதரிசி கூறினார்: "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப் பண்ணினார்". (ஏசாயா 53 : 4–6).

3. தமது சொந்த மரணத்தைப் பற்றி கிறிஸ்துவே கூறினார்: "இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்", (யோவான் 2 : 19). தமது சரீரமாகிய ஆலயத்தைப் பற்றியும், அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதல் பற்றியும் அவர் பேசிக் கொண்டிருந்தார் என்பதை இங்கு பார்க்கிறோம்.

4. மரிப்பதற்காக கிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டார்: "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்". (யோவான் 3 : 16).

5. மரண வேளை வரை கிறிஸ்து கீழ்ப்படிந்திருந்தார். அவர் மரிக்க வேண்டுமென்பது அவருடைய பிதாவின் விருப்பமாக இருந்தது : "அவர் மனித ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார். (பிலிப். 2 :8).

6. கிறிஸ்து பாவமற்று மரித்தார். கிறிஸ்துவைப் பற்றிக் கூறும் போது, "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை" என்று சொல்லப்பட்டுள்ளது. (1 யோவான் 3 : 5).

7. பாவிகளுக்காக கிறிஸ்து மரித்தார். "நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது". (1 யோவான் 4 : 10).

8. நாம் ஜீவனோடிருப்பதற்காக கிறிஸ்து மரித்தார். "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும் படிக்குத் தேவன் அவரை இவ்வுலகததிலே அனுப்பினதினால் தேவன் நம் மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது". (1 யோவான் 4 : 9).

9. கிறிஸ்து சிலுவையில் மரித்தார். மிகவும் அதிகபட்ச கொடூரமான மரணமாக அது இருந்தது. தொடர்ந்து அவர் அனுபவித்த சரீர வேதனைகளுக்கெல்லாம் மேலாக, ஒரு கொலைக் குற்றவாளியை விட அவர் உயர்ந்தவரல்ல எனக் காட்டும் வகையில் இரு திருடர்களுக்கு மத்தியில் அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்தது தான் அவரை மிகவும் வேதனைப் படுத்துவதாக இருந்தது. (மத்தேயு 27ம் அதிகாரம்) "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்". (எபி. 12 : 2).

10. நியாயப் பிரமாணத்தை அகற்றிப் போட கிறிஸ்து மரித்தார்: "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து; "...... (கொலோ. 2 : 14).

11. ஒரு புதிய சட்டத்தை அல்லது ஏற்பாட்டை தர கிறிஸ்து மரித்தார்: (மத்தேயு 26: 28). "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது. "(எபிரேயர் 8: 13).

12. சபைக்காக கிறிஸ்து மரித்தார்: "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து," . . . (எபேசியர் 5 : 25).

13. நாம் நம்பிக்கை அடையும் பொருட்டு கிறிஸ்து மரித்தார். "அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவன் எவனும், அவர் சுத்தமுள்ளவராக இருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்". (1 யோவான் 3 : 3).

14. கிறிஸ்து மரித்தார். ஆனால் அவர் அடக்கம் செய்யப்பட்ட பின்னர், அவர் உயிர்த்து, பின் பரலோகத்தில் இருக்கிற அவருடைய பிதாவினிடத்திற்குச் சென்றார். (மத்: 28 : 6;அப். 1: 10). எனவே, சகல மனிதர்களுக்கும் ஒரு உயிர்ப்பு உண்டு என்பதை கிறிஸ்து உறுதிப்படுத்தினார். (1 கொரி. 15). உண்மையாகவே, கிறிஸ்துவில் வெற்றி உள்ளது. (1 யோ. 5 : 4, 5).

இவை கிறிஸ்து ஏன் மரித்தார் என்பதற்கான சில காரணங்களாகும். நீங்கள் பார்க்க முடிவதைப் போல, மரிக்க வேண்டும் என்பதற்காக மட்டும் அவர் மரிக்கவில்லை. ஆனால் ஒரு காரணத்திற்காக அவர் மரித்தார். உனக்காகவும் எனக்காகவும் அவர் மரித்தார். மனுக்குலம் முழுவதிற்குமாக அவர் மரித்தார். நாம் வீழ்ந்து போகாமல், இரட்சிக்கப்படத்தக்கதாக அவர் மரித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் நித்தியத்திற்கும் இரட்சிப்படைய அவர் மரித்தார்.

நீ வாழ்வதற்காக தம்மையே அர்ப்பணித்து உன் பேரிலுள்ள அவருடைய அன்பை கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கிறார். அவருடைய அன்புக்கு ஈடு செய்ய, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய பொறுப்பு உன்னுடையது. கிறிஸ்து கூறினார் : "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்" (யோவான் 14 : 15).

J.C. சோட்

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | | |
|---|---|---|
| **HINDI** | : | Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** | : | Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** | : | Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** | : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5 45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** | : | Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** | : | Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, டிசம்பர்
டிசம்பர் – THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivored Please return to
The Editor
phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER

BOOK - POST